


**23. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. இந்திய விண்வெளித்துறை சர்வதேச அளவில் வலுவான இடத்தை பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தொ◌ிவித்தார்.

2. ஆரோக்கியமான வாழ்க்கை முறையின் அவசியத்தை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தி உள்ளார்.

3. தமிழக திருக்கோவில்களில் நிர்வாக சீரமைப்புகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் கூறியுள்ளார்.

4. நெல்லை மாவட்டத்தில் போதையில்லா தமிழகம் விழிப்புணர்வு மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது.

5. நெதர்லாந்தில் மகளிர் உலககோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

தேசிய விண்வெளி தினம்

இந்திய விண்வெளித்துறை சர்வதேச அளவில் வலுவான இடத்தை பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தொ◌ிவித்தார்.

தேசிய விண்வெளி தினத்தை ஒட்டி பிரதமர் வெளியிட்டுள்ள காணொலி செய்தியில், சர்வதேச அளவில் இந்தியா தனது விண்வெளித் துறையை விரிவுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், புதிய தொழில்நுட்பங்களையும் உருவாக்கி வருவதாக கூறியுள்ளார்.

இத்தினத்தை ஒட்டி இத்துறை சார்ந்த ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பிரதமர், உலகளாவிய விண்வெளித்துறையின் முன்னணி சக்தியாக இந்தியா திகழவேண்டுமென அறிவுறுத்தினார்.

இதற்கான சூழலை கட்டமைக்க ஸ்டார்அப் நிறுவனங்கள் உறுதியேற்க வேண்டுமென்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

விண்.தினம் - கஜேந்திரசிங் ஷெகாவத்

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்கு இலக்கை அடைவதற்கு விண்வெளி தொழில்நுட்பம் முக்கிய பங்காற்றுவதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் தொ◌ிவித்துள்ளார்.

அஹமதாபாத்தில் நடைபெற்ற 3-வது தேசிய விண்வெளி தின கொண்டாட்டங்களில் உரையாற்றிய அமைச்சர் இத்துறை சீர்த்திருத்தங்கள் புத்தொழில் நிறுவனங்களுக்கு நல்வாய்ப்பாக திகழ்கிறது என்றார்.

நாட்டில் விண்வெளித்துறையின் அபரிமிதமான வளர்ச்சி, விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சாமானிய மக்களின் வாழ்வில் முக்கிய பங்காற்றுவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

விண்.தினம் - ஜீதேந்திர சிங்

உலகின் முன்னணி விண்வெளி ஆய்வு நாடுகளின் வரிசையில் இந்தியா இடம்பெற்றுள்ளதாக மத்திய அறிவியல் தொழில் நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜீதேந்திரா சிங் தொ◌ிவித்துள்ளார்.

சந்திரயான் – 3 நிலவின் தென்துருவ பகுதியில் வெற்றிகரமாக தரையிறங்கிய சாதனையின் மூலம் இது சாத்தியமானதாக அமைச்சர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய விண்வெளி தினத்தை ஒட்டி நாட்டுத் தலைவர்கள் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், இத்துறைசார் விஞ்ஞானிகள்,

பொறியாளர்கள், கண்டுபிடிப்பாளர்களின் அர்ப்பணிப்பு, தேசத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றதாகவும், இப்பணியில் ஈடுபட்டவர்களுக்கு வணக்கம் செலுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

விண்.தினம் - எல்.முருகன்

இந்நாளையொட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டின் விண்வெளி பயணம் நிலவு தொடங்கி சூரியன் மற்றும் அதற்கு அப்பாலும் நீண்டு வருவதாக கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரிக்ஸ்

ஆரோக்கியமான வாழ்க்கை முறை மனித வாழ்வில் அன்றாட நிகழ்வாக திகழ வேண்டியதன் அவசியம் குறித்து மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தி உள்ளார்.

விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் சைக்கிள் பேரணி நிகழ்ச்சியில் இதனைத் தொிவித்த அவர், மிதிவண்டி பயணம் என்பது பிட் இந்தியா இயக்கத்தின் ஒருங்கிணைந்த பகுதி என்றார்.

இன்றைய நிகழ்வில் பிரிக்ஸ் நாடுகளின் பிரதிநிதிகள், மத்திய மாநில அரசு பணியாளர்கள், காவல்துறை ஊழியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நாடுமுழுவதும் ஆயிரத்து 800 நகரங்களில் நடைபெற்ற இப்பேரணியில் 50 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்று உடற்தகுதி மேம்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இதனிடையே இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் விளையாட்டுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பாரம்பரிய மற்றும் உள்நாட்டு விளையாட்டுக்கள், புதுமை தொழில்நுட்பம், விளையாட்டு உபகரண உற்பத்தியில் பிரிக்ஸ் நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் ரஷ்யாவில் நடைபெறும் 27-வது இந்தியா – ரஷ்யா ஆணையக் கூட்டத்தில் இன்று பங்கேற்கிறார்.

ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் ஷெர்ஜி லாவ்ரோவ்வை சந்திக்கும் அவர், இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல் தொழில்நுட்பம் உள்ளிட்டவை குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ரமேஷ்

தமிழக திருக்கோவில்களில் நிர்வாக சீரமைப்புகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தொ◌ிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாலப்பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தமிழகத்தில் 50 முதுநிலை கோவில்களில் பக்தர்கள் கைப்பேசிகளை எடுத்துச்செல்ல கூடாது என்கிற நடைமுறை பின்பற்றப்பட்டு வருவதாகவும், அதனை பாதுகாப்பாக வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அமைச்சர்கள்

நெல்லை மாவட்டத்தில் போதையில்லா தமிழகம் - விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை, சிறு குறு தொழில்கள் துறை அமைச்சர் திரு. மதன்ராஜா, சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. ஜெகதீஸ்வரி ஆகியோர் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

3 பிரிவுகளாக நடைபெற்ற இம்மாரத்தான் நிகழ்ச்சியில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்று விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அன்புமணி

சென்னை நகரில் வெள்ள பாதிப்புகள் ஏற்படாமல் தடுப்பதற்காக திருப்புகழ் குழு தயாரித்து அளித்த அறிக்கையை மாநில அரசு வெளியிட வேண்டுமென்று பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இக்குழு 17 மாதங்கள் பல்வேறு களஆய்வுகளை மேற்கொண்டு அதன் தரவுகள் மூலம் தனது அறிக்கையை தயாரித்துள்ள நிலையில் அதன் பரிந்துரைகள் பருவமழை தொடங்குவதற்கு முன் நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மக்கள்தொகை கணக்கெடுப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு பணிகளில் ஆயிரத்து 736 கணக்கெடுப்பாளர்களும்,

275 மேற்பார்வையாளர்களும் ஈடுபட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. சினேகா தொ◌ிவித்துள்ளார்.

கணக்கெடுப்பு பணியாளர்கள் தங்கள் பகுதிக்கு வரவில்லையென்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கலாம் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

தேனி மாவட்டத்திற்குட்பட்ட பேரூராட்சிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான குறைதீர் நாள் கூட்டம் நாளை மறுநாள் நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் டாக்டர் வைத்திநாதன் தொ◌ிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் வேப்பூரில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் நாளைமறுநாள் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

மேட்டூர்

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 12 ஆயிரத்து 883 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 86.53 அடியாகும்.

அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக 2 ஆயிரம் கனஅடிவீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 13 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி பரிசல் இயக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

யானை

நீலகிரி மாவட்டம் கூடலூரிலிருந்து தொரப்பள்ளி சாலையில் யானை நடமாட்டம் இருப்பதால் சுற்றுலாப்பயணிகள் அப்பகுதியை எச்சரிக்கையுடன் கடக்குமாறு வனத்துறை அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

நெல்லையப்பர்

அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் திருக்கோவில் கரூவூர் சித்தருக்கு நெல்லையப்பர் காட்சிக்கொடுக்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்ததாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

திருவண்ணாமலை, ஆரணி அருள்மிகு காமக்கூர் சுயம்பு சந்திரசேகர் ஆலய கும்பாபிஷேகம் இன்று விமரிசையாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் கலவை ஸ்ரீ அங்காளம்மன் ஆலய மண்டலாபிஷேகம் இன்று நிறைவடைந்தது. இவற்றில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

வேளாங்கன்னி

நாகை வேளாங்கன்னி புனித ஆரோக்கிய அன்னை பேராலய திருவிழா வரும் 29-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

இதற்கான முன்னேற்பாட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மகளிர் ஹாக்கி

நெதர்லாந்தில் மகளிர் உலககோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்றிரவு ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் இந்தியா வெற்றிபெற்றால் மட்டுமே அரையிறுதியில் பங்கேற்கமுடியும்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

கொழும்புவில், இலங்கைக்கு எதிரான 2-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதலாவது இன்னிங்சில் சற்றுமுன் 2 விக்கெட் இழப்பிற்கு 142 ரன் எடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

அமெரிக்காவில் நடைபெறும் ATP டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் தகுதிச்சுற்று இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் தக்சினேஸ்வர் சுரேஷ் – ஜோர்டனின் அபிதல்லா ஷெல்பேயை இன்று இரவு எதிர்கொள்கிறார்

இன்று நடைபெற்ற அரையிறுதியில் அவர், ஸ்பெயினின் **Roger Pascual Ferra** ஐ 3-6, 6-3, 6-4 என்ற செட்களில் வென்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖